# *DEPOSITION OF WITNESS*

# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.434/2015

## PW: 4

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சுரேஷ் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.சுப்பையயன் | Calling : | LW4 |
| Village : | தாராசுரம் | Age : | 49 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22th day of September 2025.

Signature of Witness.

(Accused present. Petition filed and allowed. Assistant Public Prosecutor Grade-I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தாராசுரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மத்திய கூட்டுறவு வங்கியில் திருப்பனந்தாள் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 2011 முதல் 2014 வரை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி திருவிடைமருதூர் பிளாக்கில், திருப்பனந்தாள் வட்ட கள மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் 39 கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கங்களும், 5 சிக்கன நாணய சங்கங்களும் இருந்தன. அதில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கமும் ஒன்றாகும். உதவி கள மேலாளர் வெங்கடேசன் 25.05.2013 அன்று கிருஷ்ணாபுரம் தொடக்க

வேளாண்மை சங்கத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டு அதில் முறைகேடு இருப்பதாக எனக்கு கடிதம் அனுப்பினார். நகைக்கடனில் ஆதார குறைவு 5 லட்சமும், உரக்கடனில் ஆதார குறைவு சுமார் ஒரு லட்சமும் முறைகேடு நடந்திருப்பதாக கடிதம் அனுப்பினார். கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை சங்கத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டபோது மார்ட்டின் செயலாளர் (பொறுப்பு) பணியில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் 25.05.2013 ம் தேதியிட்ட கடிதம் வெங்கடேசன் உதவி கள மேலாளர் அவர்களால் எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆகும். அந்த கடிதம் அ.சா.ஆ.9 ஆகும். அந்த கடிதத்தின் அடிப்படையில் மேற்கண்ட சங்கத்தினை உடனடியாக ஆய்வு மேற்கொள்ள வேண்டி அன்றைய தினமே செயல் ஆட்சியர், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி அவர்களுக்கு கடிதம் அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் 25.05.2013 தேதியிட்ட செயல் ஆட்சியர், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி அவர்களுக்கு நான் அனுப்பிய கடிதம் ஆகும். அந்த கடிதம் அ.சா.ஆ.10 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை சங்கம் சம்மந்தமாக எனது பணி என்ன என்றால் முறைகேடு நடந்திருப்பதாக தெரியவந்தால் எனது அனுமதியின்பேரில் எனது உதவி கள மேலாளர் சங்கங்களுக்கு சென்று முறைகேடு சம்மந்தமாக ஆய்வு செய்வார். அவ்வாறு இந்த வழக்கில் எனது உதவி கள மேலாளரை மேற்படி சங்கத்திற்கு அனுப்பினேன். அவ்வாறு கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை

சங்கத்தை திடீர் ஆய்வதற்கு உதவி கள மேலாளருக்கு ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் உதவி கள மேலாளர் அவருக்குரிய சங்கங்களுக்கு சென்று வாரத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்வது அவரது பணியாகும். எனது உதவி கள மேலாளர் ஆய்வு செய்ததற்கு சங்கத்தில் பராமரிப்பு பதிவேடு பராமரிக்கப்படும் என்றாலும், மேலும் அவருடைய அன்றாட பணிகளுக்கான நாட்குறிப்பு வைத்திருப்பார் என்றாலும் சரிதான். அவ்வாறு உதவி கள மேலாளர் ஆய்விற்கு சென்றார் என்பதனை மேற்படி 2 பதிவேடுகளை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். அதேபோல் உதவி கள மேலாளர் வாராவாரம் சங்கங்களுக்கு ஆய்வு செய்வதை மேற்படி பதிவேட்டினை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் கடிதம் எதுவும் நான் அனுப்பவில்லை என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடிதம் அனுப்பினேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடிதத்தில் உள்ள சங்கதிகளை சரிவர விசாரிக்காமல் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.10 ஆவணம் செயல் ஆட்சியர் அலுவலகத்தில் 27.05.2013 அன்று பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 25.05.2013 அன்று அனுப்பிய கடிதத்தை 27.05.2013 அன்று காலதாமதமாக பெறப்பட்டதற்கான காரணம் என்ன என்றால் தபால் மூலமாக அனுப்பியிருந்தோம், அதை பெற்று அவர்கள் பதில் சொல்ல காலதாமதம் ஆகிவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கும்பகோணம் செயல் ஆட்சியர் அலுவலகத்தில் அஞ்சல் மூலம் பெறப்பட்டதற்கான மேற்குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் நாள், நேரத்தில் நான் மேலே

சொன்ன ஆவணங்களை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் செயல் ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னால் எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.